**சுருக்கம்**

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 (தமிழ்நாடு சட்டம் 21/1994) –சிவகங்கை மாவட்டம், கல்லல் மற்றும் சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து 5 கிராம ஊராட்சிகளை காரைக்குடி நகராட்சியுடன் இணைத்து காரைக்குடி மாநகராட்சியாக தரம் உயர்த்தி மறுசீரமைப்பு செய்து அரசாணை மற்றும் அறிவிக்கை வெளியிடப்பட்டது – கல்லல் மற்றும் சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 5 கிராம ஊராட்சிகளை நீக்கி ஊரக உள்ளாட்சி அமைப்புகளை மறுசீரமைப்பு செய்து ஆணை மற்றும் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, (தமிழ்நாடு சட்டம் 21/1994) பிரிவு 15, உட்பிரிவு (4)(i)–ன்படி அறிவிக்கை – வெளியிடப்படுகிறது.

---

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி [பரா–2(1)]த் துறை**

அரசாணை (நிலை) எண்.67

நாள்: 13.03.2026.
விசுவாவசு, மாசி – 29,
திருவள்ளுவர்ஆண்டு 2057.
படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண் 102, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள் 10.08.2024.
2. தமிழ்நாடு அரசிதழின் சிறப்பிதழ் எண். 257, நாள் 10.08.2024.
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண்.69023/2023/ப.ரா.1.1, நாள் 05.03.2026.

-------

**ஆணை:**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் சிவகங்கை மாவட்டம், கல்லல் ஊராட்சி ஒன்றியத்திலிருந்து கோவிலூர், தளக்காவூர் கிராம ஊராட்சிகள் மற்றும் சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்திலிருந்து அரியக்குடி, இலுப்பக்குடி மற்றும் சங்கராபுரம் கிராம ஊராட்சிகள் ஆகமொத்தம் 5 கிராம ஊராட்சிகளை காரைக்குடி நகராட்சியுடன் இணைத்து காரைக்குடி மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு, ஆணை வெளியிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட 10.08.2024–ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பிதழில் அறிவிக்கை வெளியிடப்பட்டது.

2. இந்நிலையில் மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி ஆணையரின் கடிதத்தில், சிவகங்கை மாவட்டம், கல்லல் ஊராட்சி ஒன்றியத்திலிருந்து 2 கிராம ஊராட்சிகள் மற்றும் சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்திலிருந்து 3 கிராம ஊராட்சிகள் ஆகமொத்தம் 5 கிராம ஊராட்சிகளை காரைக்குடி நகராட்சியுடன் இணைத்து காரைக்குடி மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு, மேலே 1 மற்றும் 2–ல் படிக்கப்பட்ட ஆணை மற்றும் அறிவிக்கை வெளியிடப்பட்டு அதன்படி 10.08.2024 அன்று மேற்குறிப்பிட்ட 5 கிராம ஊராட்சிகள் காரைக்குடி நகராட்சியுடன் இணைத்து காரைக்குடி மாநகராட்சியாக செயல்பட்டு வருகிறது எனத் தெரிவித்துள்ளார். அதன் விவரம் பின்வருமாறு.

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | ஊராட்சி ஒன்றியத்தின் பெயர் | நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுடன் இணைக்கப்பட்ட கிராம ஊராட்சிகளின் பெயர் |
|---|---|---|---|
| 1 | சிவகங்கை | கல்லல் | கோவிலூர் |
| 2 | சிவகங்கை | கல்லல் | தளக்காவூர் |
| 3 | சிவகங்கை | சாக்கோட்டை | அரியக்குடி |
| 4 | சிவகங்கை | சாக்கோட்டை | இலுப்பக்குடி |
| 5 | சிவகங்கை | சாக்கோட்டை | சங்கராபுரம் |

3. மேலும், மக்கள்தொகை கணக்கெடுப்பு பணி (Census) மேற்கொள்ளப்பட்டு வருவதால், மேற்குறிப்பிட்டுள்ள 5 கிராம ஊராட்சிகள் காரைக்குடி நகராட்சியுடன் இணைக்கப்பட்டதை தொடர்ந்து கல்லல் மற்றும் சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்திலிருந்து நீக்கம் செய்த கோவிலூர், அரியக்குடி, இலுப்பக்குடி, சங்கராபுரம் மற்றும் தளக்காவூர் கிராம ஊராட்சிகளுக்கு உட்பட்ட அதிகார வரம்பு மாற்றங்கள் காரைக்குடி மாநகராட்சியின் கீழ் செயல்பட்டு வருகிறது எனவும் ஊராட்சி வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்.

4.இந்நிலையில் மேற்காண் அரசாணை மற்றும் அறிவிக்கை வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து, சிவகங்கை மாவட்டத்தில், காரைக்குடி நகராட்சியுடன் இணைக்கப்பட்ட 5 கிராம ஊராட்சிகளை கல்லல் மற்றும் சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து நீக்கி ஊரக உள்ளாட்சி அமைப்புகளை மறுசீரமைப்பு செய்து ஆணை மற்றும் அறிவிக்கை வெளியிடும் பொருட்டு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் உரிய கருத்துருவினை அரசுக்கு அனுப்பி ஆணை மற்றும் அறிவிக்கை வெளியிடுமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

5. மேற்காண் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கருத்துருவினை அரசு நன்கு ஆய்வு செய்து, அதனை ஏற்க முடிவு செய்து, மேலே 1

மற்றும் 2–இல் படிக்கப்பட்ட அரசாணை மற்றும் அறிவிக்கையில் சிவகங்கை மாவட்டத்தில், கல்லல் ஊராட்சி ஒன்றியத்திலிருந்து கோவிலூர், தளக்காவூர் ஆகிய 2 கிராம ஊராட்சிகள் மற்றும் சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்திலிருந்து அரியக்குடி, இலுப்பக்குடி மற்றும் சங்கராபுரம் ஆகிய 3 கிராம ஊராட்சிகள் காரைக்குடி நகராட்சியுடன் இணைக்கப்பட்டதால், மேற்குறிப்பிட்டுள்ள 5 கிராம ஊராட்சிகளை கல்லல் மற்றும் சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து நீக்கி ஊரக உள்ளாட்சி அமைப்புகளை மறுசீரமைப்பு செய்து ஆணை மற்றும் 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் பிரிவு 15, உட்பிரிவு (4)(i)–ன்படி அறிவிக்கை வெளியிட அரசு ஆணையிடுகிறது.

6. இவ்வாணையினைத் தொடர்ந்து, 13.03.2026 நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பிதழில் பின்னிணைப்பில் கண்டுள்ள அறிவிக்கைகளை (I & II) தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் வெளியிடுமாறு பணிமேலாளர், அரசு மைய அச்சகம், சென்னை–75 அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ககன்தீப் சிங் பேடி**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.**

**<u>பெறுநர்</u>**

பணிமேலாளர், அரசு மைய அச்சகம், சென்னை–75
( 13.03.2026 நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பிதழில் அறிவிக்கை வெளியிட)
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை–15.
மாவட்ட ஆட்சித்தலைவர், சிவகங்கை மாவட்டம்.
அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்கள் (சென்னை மாவட்டம் நீங்கலாக).

**<u>நகல்</u>**

முதலமைச்சர் அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை–9.
மாண்புமிகு ஊரக வளர்ச்சி அமைச்சர் அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
தலைமைச் செயலாளர் அவர்களின் முதுநிலை தனிச்செயலர், தலைமைச் செயலகம், சென்னை–9.
நிதித்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.
சட்டத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.
நகராட்சி நிருவாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை,

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களின் முதுநிலை
தனிச்செயலர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை–9.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

ம. நீ. நிலமேகம்
பிரிவு அலுவலர்.

13/3/2026

**APPENDIX**
**NOTIFICATION – I.**

In exercise of the powers conferred by clause (i) of sub-section (4) of section 15 of the Tamil Nadu Panchayats Act, 1994 (Tamil Nadu Act 21 of 1994) and in partial modification of the Notification published in respect of declaration of Kallal Panchayat Development Block under sub-section (3) of that section, the Governor of Tamil Nadu hereby excludes the local areas comprised in the Kovilur and Thalakkavur (Managiri) Village Panchayats from the Kallal Panchayat Development Block in Sivagangai District, consequent on their inclusion within the Karaikudi City Municipal Corporation by Municipal Administration and Water Supply Department vide Notification No.II(2)/MAWS/743(a-1)/2024, published at page 1 of Part-II-Section 2 of the Tamil Nadu Government Gazette Extraordinary, dated the 10th August 2024.

2. Based on the above exclusion, wards will be divided for the next ordinary election.

**GAGANDEEP SINGH BEDI**
**Additional Chief Secretary to Government.**

// TRUE COPY //

Section Officer

13/3/2026

## அறிவிக்கை – I.

1994 ஆம் ஆண்டைய தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 15 ஆம் பிரிவைச் சேர்ந்த (4) உட்பிரிவின் (i)–ஆம் கூறில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை பயன்படுத்தி, மேலும் அதே பிரிவின் உட்பிரிவு (3)–இன்படி, கல்லல் ஊராட்சி வளர்ச்சி வட்டாரமாக விளம்புகை செய்யப்பட்ட அறிவிக்கையினை பகுதியாக திருத்தம் செய்யும் வகையில், கோவிலூர் மற்றும் தளக்காவூர் கிராம ஊராட்சிகள் காரைக்குடி மாநகராட்சியுடன் இணைத்து நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அறிவிக்கை எண்.II(2)/ந.நி(ம)கு.வ./743(a–1)/2024, 10 ஆகஸ்ட் திங்கள் 2024 தேதியிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பிதழில் பக்கம் 1, பகுதி II – பிரிவு 2 மூலம் அறிவிக்கை வெளியிடப்பட்டதின் காரணமாக, சிவகங்கை மாவட்டத்தில் உள்ள கல்லல் ஊராட்சி வளர்ச்சி வட்டாரத்திலிருந்து கோவிலூர் மற்றும் தளக்காவூர் கிராம ஊராட்சிகளின் உள்ளூர் பகுதிகளை தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் இதனால் நீக்குகிறார்

2. மேற்சொன்ன பகுதிகள் நீக்கத்தின் அடிப்படையில், அடுத்து வரும் சாதாரணத் தேர்தலுக்கு வார்டுகள் பிரிக்கப்படும்.

ககன்தீப் சிங் பேடி
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்

13/3/2026

**NOTIFICATION – II.**

In exercise of the powers conferred by clause (i) of sub-section (4) of section 15 of the Tamil Nadu Panchayats Act, 1994 (Tamil Nadu Act 21 of 1994) and in partial modification of the Notification published in respect of declaration of Sakkottai Panchayat Development Block under sub-section (3) of that section, the Governor of Tamil Nadu hereby excludes the local areas comprised in the Ariyakkudi, Illuppakudi and Sankarapuram Village Panchayats from the Sakkottai Panchayat Development Block in Sivagangai District, consequent on their inclusion within the Karaikudi City Municipal Corporation by Municipal Administration and Water Supply Department vide Notification No.II(2)/MAWS/743(a-1)/2024, published at page 1 of Part-II-Section 2 of the Tamil Nadu Government Gazette Extraordinary, dated the 10th August 2024.

2. Based on the above exclusion, wards will be divided for the next ordinary election.

**GAGANDEEP SINGH BEDI**
**Additional Chief Secretary to Government.**

// TRUE COPY //

Section Officer

13/3/2026

## அறிவிக்கை – II.

1994 ஆம் ஆண்டைய தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 15 ஆம் பிரிவைச் சேர்ந்த (4) உட்பிரிவின் (i)–ஆம் கூறில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை பயன்படுத்தி, மேலும் அதே பிரிவின் Pஉட்பிரிவு (3)–இன்படி, சாக்கோட்டை ஊராட்சி வளர்ச்சி வட்டாரமாக விளம்புகை செய்யப்பட்ட அறிவிக்கையினை பகுதியாக திருத்தம் செய்யும் வகையில், அரியக்குடி, இலுப்பக்குடி மற்றும் சங்கராபுரம் கிராம ஊராட்சிகள் காரைக்குடி மாநகராட்சியுடன் இணைத்து நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அறிவிக்கை எண்.II(2)/ந.நி(ம)கு.வ./743(a-1)/2024, 10 ஆகஸ்ட் திங்கள் 2024 தேதியிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பிதழில் பக்கம் 1, பகுதி II – பிரிவு 2 மூலம் அறிவிக்கை வெளியிடப்பட்டதின் காரணமாக, சிவகங்கை மாவட்டத்தில் உள்ள சாக்கோட்டை ஊராட்சி வளர்ச்சி வட்டாரத்திலிருந்து அரியக்குடி, இலுப்பக்குடி மற்றும் சங்கராபுரம் கிராம ஊராட்சிகளின் உள்ளூர் பகுதிகளை தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் இதனால் நீக்குகிறார்

2. மேற்சொன்ன பகுதிகள் நீக்கத்தின் அடிப்படையில், அடுத்து வரும் சாதாரணத் தேர்தலுக்கு வார்டுகள் பிரிக்கப்படும்.

**ககன்தீப் சிங் பேடி**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.**

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்

13/2/2026